ஒரு அறிவித்தல்!

# சிறுவர்களுக்கு மட்டுமல்ல — பெரியவர்களுக்கும்!

இக்கதை எனது சொந்தக் கற்பனையில் பிறந்ததல்ல. எந்தப் புத்தகத்திலும் வாசித்ததுமல்ல. எங்கோ, எப்பொழுதோ, எவரோ சொல்லக் கேட்ட கதை. சின்ன வயதில் கேட்ட இக்கதை காலத்தால் அழியாது கருத்தில் குடிகொண்டுவிட்டது.

இக்கதையை யார் எனக்குச் சொன்னுர்கள்? பாட்டியா, மாமாவா, அண்ணனு அல்லது வழியில் சந்தித்த ஒரு தாத்தாவா? கதை நினைவிருக்கிறது. கதை சொன்னவன் மறைந்துவிட்டான்.

நான் சிறுவனுயிருக்கும்போது இக்கதையைக் கேட்டு மகிழ்ந்தேன். என்னை மகிழ்வித்த கதை எல்லாச் சிறுவர்களையும் மகிழ்விக்கட்டும் என்ற எண்ணத்தால் இக்கதையை ''சிரித்திர''னின் சிறுவாசகர்களுக்குத் தருகிறேன்.

இக்கதையின் மூலமென்ன? தகுந்த ஆதாரங்களுடன் யாராவது அதைக் கண்டுபிடித்துத் தெரிவித்தால் நான் மிகவும் மகிழ்ச்சியடைவேன்.

அ. ந. கந்தசாமி.

**சிறுவர் தொடர்கதை**

# சங்கீதப் பிசாசு

— அ. ந. கந்தசாமி —



## 1-ம் அத்தியாயம்
## மந்திர மணி



சீரங்க நாட்டிலே சீரங்கன் என்ருெரு சங்கீத வித்வான் இருந்தான். அவனுக்கு ஒரு மனைவியும் ஐந்து பிள்ளைகளும் இருந்தனர். அவன் கல்யாணம் செய்த காலத்தில் ஊரிலே கர்நாடகசங்கீதத்துக்கு மதிப்பிருந்தது. அதனுல் அவனுக்குப் போதிய வருவாயும் இருந்தது. ஆனுல் சில காலம் செல்ல கர்நாடக சங்கீதத்துக்கு மதிப்புப் போய் டப்பா சங்கீதத்துக்கு மதிப்பேற்பட்டது. இதனுல் சீரங்கனை இசைக்கச்சேரிகளுக்கு அழைப்பவர்கள் குறைந்து போனுர்கள். அதன் காரணமாக அவனை வறுமைநோய் பீடித்தது.

இதைக் கண்ட அவனது நண்பர்களில் சிலர் அவனிடம் சென்று, ''ஐயா சீரங்கபவதரே, உம்முடைய கீதம் மிகச் சிறப்பாய் இருந்தாலும் அதைக் கேட்டு ம

பழைய ஆசிரியர்: (பழைய மாணவனைப் பார்த்து) என்னடா ராமு எப்பொழுது பார்த்தாலும் தெருவையே அளந்துகொண்டு இருக்கிறாயே? என்ன உனக்கு வேலையேதும் இல்லையா?

ராமு: நான் "சேர்லை"யர் பார்ட்டியில் இருந்து வேலை பார்க்கிறேன் சார்!

இரா. தர்மலிங்கம், நெடுந்தீவு.

இந்த ஊரில் யாருமில்லை. ஏனெனில் இந்த ஊரில் உள்ளார் அனைவரையும் சினிமாப் பைத்தியம் பிடித்திருக்கிறது. ஆகவே அந்தப் பைத்தியம் நீங்கும்வரைக்கும் தயவுசெய்து நீங்களும் டப்பாப்பாட்டுக்களையே பாடிவர வேண்டும்'' என்று வினயமாகக் கேட்டுக்கொண்டார்கள்.

ஆனால் சீரங்கனோ அதற்கு இசையவில்லை. ''நான் உயர்வான கர்நாடக இசையையே எனது இளமைக் காலத்திலிருந்து பயின்றுவிட்டேன். டப்பாப் பாட்டுக்களைப் பாடுவது எனக்கு மிக எளிதானாலும் அதில் கலையழகோ சிறப்போ இல்லை என்பதே எனது எண்ணம். அத்துடன் ஒரு டப்பாப்பாட்டை நாலு நாட்கள் கேட்டவர்கள் ஐந்தாம் நாள் அதனை விரும்பிக்கேட்கமாட்டார்கள். அது இலகுவில் புளித்துவிடுகிறது. அதனால்தான் சினிமாப் பாட்டுகள் தியாகையர் கீர்த்தனைகள்போல் நீண்ட நாட்கள் சீவித்திருப்பதில்லை. டப்பாப்பாட்டு தேங்காய் சேர்ந்த மோதகம், கொழுக்கட்டை போன்றது. கர்நாடக சங்கீதமோ பொரிவிழாங்காய் போன்றது. காலையில் அவித்த மோதகம் மாலையிலே ஊசிப்போய்விடுகிறது. ஆனால் பொரிவிழாங்காயோ பல மாதக்கணக்கில் உணவாகப் பயன்படுகிறது. இப்படிப்பட்ட கர்நாடக இசையை விடுத்து இலகுவில் ஊசிப்போகும் சினிமாப் பாட்டுகளை என்னால் விரும்பிப்பாட முடியாது. இன்னும் சினிமாப்பைத்தியம் நீங்கும்வரை டப்பாப்பாட்டுக்களைப் பாடும்படி கேட்டீர்கள். இந்தப் பைத்தியம் ஒருபோதும் நீங்காது என்பதே எனது கருத்து. ஆனபடியால் நான் உங்கள் ஆலோசனையை ஏற்று டப்பாப் பாட்டுகளைப் பாட ஆரம்பித்தால் சாகும்வரை அப்பாட்டுகளையே பாடவேண்டியிருக்கும். அத்துடன் மக்கள் என்னை சீரங்க பாகவதர் என்று அழைப்பதற்குப் பதிலாக டப்பாப் பாகவதர் என்று அழைக்கவும் ஆரப்பித்துவிடுவார்கள். அதனால் இது என்னால் முடியாத காரியம்'' என்று கூறிவிட்டான்.

நண்பர்கள் இதைக் கேட்டுக் கவலையடைந்தார்களாயினும் ''ஐயா சீரங்க பாகவதரே கொண்ட கொள்கையை விடாத உத்தம மனிதர் நீங்கள். அதற்காக உங்களைப் பாராட்டுகிறோம்'' என்று அவரைத் தம் வாயாரப் பாராட்டிவிட்டுச் சென்றார்கள்.

சீரங்கனின் இக்கொள்கைப் பிடிப்பின் காரணமாக அவனது வறுமை மேலும் மேலும் அதிகரித்தது. வீட்டிலே சமைப்பதற்கு அரிசி வாங்குவதற்குக்கூட அவனிடம் போதிய பணம் இல்லாது போய்விட்டது. அதனால் அவனது ஐந்து பிள்ளைகளும் பசியால் அழுதார்கள். அதனைக் கண்டு துக்கம் தாழாமல் சீரங்கன் எங்காவது போய் பணம் தேடிவர வேண்டும் என்று வீட்டை விட்டுப் புறப்பட்டான்.

வழியிலே தனக்குத் தெரிந்த ஒரு பணக்காரர் எதிர்ப்பட அவரிடம் ''ஐயா பிரபுவே, நான் செலவுக்குப் பணமில்லாது கஷ்டப்படுகிறேன். ஐந்து ரூபா கொடுங்கள். அடுத்த சங்கீதக்கச்சேரிக்குக் கிடைக்கும் பணத்தில் கடனைத் தீர்த்துவிடுகிறேன்'' என்று சொன்னான்.

அதற்கு அந்தப் பணக்காரர் சிரித்து, ''தம்பி, உன்னுடைய கதையைக் கேட்க எனக்கு மிகவும் மனவருத்தமாக இருக்கிறது. என்றாலும் நீதான் காதுக்கினிய சினிமாப்பாட்டுக்களைப் பாடமாட்டாயே தம்பி! உன்னை யார் கச்சேரிக்கு அழைப்பார்கள்? ஆகவே உன்னால் கடனைத் தீர்க்க முடியாது. மேலும் ஒவ்வொருவனும் தனது வருவாய்க்குள்ளே சீவிக்கப் பழகவேண்டும் தம்பி. எவ்வளவு

கஷ்டம் வந்தாலும் கடன் வாங்கக்கூடாது தம்பி: அது கெட்ட பழக்கம் தம்பி" என்று தாராளமாகப் புத்திமதி கூறிவிட்டுச் சென்றுவிட்டார்.

சிரங்கனுக்குத் துக்கம் அதிகரித்தது: சிறிதுநேரம் சற்றுத் தொலைவிலுள்ள காட்டிற்குச் சென்று அங்கேயுள்ள பெரிய ஆலமரத்தின் நிழலில் ஆறி இருந்துவிட்டு வரலாம் என்று காட்டை நோக்கி நடந்தான்.

அந்த ஆலமரம் ஐநூறு விழுதுகளுடன் ஒரு பெரிய மண்டபம்போல் காட்சியளித்தது. சிரங்கன் தூண்கள் போல் காட்சியளித்த அந்த விழுதுகளிடையே தன் மேல் துண்டை விரித்துவிட்டு சம்மணம்கொட்டி உட்கார்ந்தான்.

சிரங்கனுக்கு வாழ்க்கை வெறுத்துப்போய்விட்டது. தற்கொலை செய்துகொள்வதுதான் மேல் என்று யோசித்தான் அவன். ஆனால் சாகுமுன் கடைசிமுறையாக ஒரு கச்சேரியைச் செய்துவிட்டுச் சாகவேண்டுமென்பது அவனது ஆசை. ஆனால் மனிதரோ கர்நாடக இசையை வெறுத்துவிட்டார்கள். ஆகவே, தன் கடைசிக் கச்சேரியைக் காட்டு மிருகங்களுக்கும் வானத்துப் பறவைகளுக்கும் நடத்துவது என்று தீர்மானித்து அவையாவது தனது இசையைக் கேட்டு மகிழட்டும் என்று எண்ணிக்கொண்டு ஆலமர மண்டபத்திலே தன் கச்சேரியைத் தொடங்கினான் சிரங்கன்.

தொடங்குமுன்னர் தன் குரலை உயர்த்தி "வனவிலங்குகளே, பறவைகளே, மரங்களே டிக்கெட்டில்லாத இசை விருந்து; தயவுசெய்து வந்து கேளுங்கள்" என்றுசப்தமிட்டுவிட்டு பாட ஆரம்பித்தான் அவன்.

அதைக்கேட்டு சிங்கம், புலி, கரடி, யானை, கழுதை, எருமை, மான்போன்ற பெரிய மிருகங்கள் எதுவும் அங்கு வரவில்லை. ஒருசில காகங்களும், ஒரு அணிலும் ஒரு ஓணானுமே வந்தன. மரங்கள் வேரூன்றி நிற்பனவாதலால் விரும்பியோ விரும்பாமலோ பாட்டைக் கேட்டுக் கொண்டு நின்றன. சிரங்கன் "ஏன் பெரிய மிருகங்கள் என் பாட்டைக் கேட்க வரவில்லை? அந்தப் பெரிய பணக்காரரைப்போல் அவற்றையும் சினிமாப் பைத்தியம் பிடித்துவிட்டது போலும்!" என்று தன்னுள்ளே கூறிக் கொண்டான்.

சிரங்கன் இவ்வாறு தனது பாட்டுக்கச்சேரியை நடத்திக்கொண்டிருக்க, ஆலமர விழுதுகளிடையே ஒரு சலசலப்பு ஏற்பட்டது. சிரங்கன் பாட்டை நிறுத்தாமலே சப்தம் வந்த திசையை நோக்கினான். இது என்ன? கன்னங் கரேலென்று கறுத்த பிசாசொன்று ஆலமரத்தின் விழுதுகளிடையே நின்றுகொண்டு தனது தலையை ஆட்டி ஆட்டிப் பட்டை ரசித்துக்கொண்டிருந்தது. சிரங்கன் பயந்துபோய்ப் பாட்டை நிறுத்தினான்.

பாட்டை நிறுத்தியதும் அந்தக் கரிய பிசாசு "ஐயா பாகவதரே, பாட்டை நிறுத்தாதீர்கள். உங்கள் கர்நாடக இசை என் காதிற்கு அமிர்தம்போல் இனிக்கிறது. தயவு செய்து தொடர்ந்து பாடுங்கள். கச்சேரி முடிந்ததும் நான் உங்களுக்கு நல்ல பரிசு வழங்குவேன்" என்று மன்றாட்டமாக வேண்டிக்கொண்டது.

சிரங்கன் பயத்தோடு பிசாசை நோக்கி "நீ யார்?" என்று கேட்டான்.

## தயவான வேண்டுகோள்

கூட்டமொன்றில் தலைவர் பேசுகிறார்: அன்பர்களே! எம் நாட்டுப் பெருங்குடி மக்களே! தொண்டர்கள் உங்கள் மத்தியில் பொதுநல நிதி திரட்டுவதற்காக தட்டுகள் ஏந்தி வருகிறார்கள். தயவுசெய்து அதில் இருந்து ஒன்றையும் எடுக்கவேண்டாம் என்று பணிவாகக் கேட்டுக்கொள்கிறோம்!

இரா. தர்மலிங்கம், நெடுந்தீவு.

## கூழல் பாடத்தில் கணக்கு

ஆசிரியர்: டேய், கோபால் ஐந்து காட்டுமிருகங்கள் கூறு.
கோபால்: மூன்று சிங்கம், இரண்டு புலி.

—வே. இளையகுட்டி - பதுளை

---

அதற்கு அந்தப் பிசாசு "ஐயா பாகவதரே, என் பெயர் சங்கீதப்பிசாசு. உங்களுடைய மெல்லிசை மிகவும் அருமையாக இருப்பதால் நான் மெய்மறந்து ஆடிக் கொண்டிருக்கிறேன். ஆகவே கச்சேரியைப் பாதியில் குழப்பாமல் பாட்டைத் தொடர்ந்து பாடுங்கள். கச்சேரி முடிந்ததும் உங்களுக்கு வேண்டியதெல்லாம் நான் தருவேன்'' என்று பதில் கூறியது.

சீரங்கனுக்கு இப்பதில் அதிக மகிழ்ச்சியைத் தந்தது. கர்நாடகப் பாட்டுக்களைப் பாடத் தொடங்கியதும், "நிறுத்து, சினிமாப்பாட்டு பாடு'' என்ற கோஷத்தைத் தான் அவன் சில காலமாகக் கேட்டுவந்திருக்கிறான். அது மனிதர்களின் கோஷம். ஆனால் ஒரு ஆலமரப் பிசாசு தொடர்ந்து பாடு என்று கூறுகிறது. இதைவிட வேறு சந்தோஷம் இவ்வுலகில் உண்டா? அந்தப் பிசாசைக் கட்டிப் பிடித்து மூத்தங்கொடுக்க வேண்டும்போல் இருந்தது அவனுக்கு.

கச்சேரி முடிந்ததும் சங்கீதப்பிசாசு சீரங்கனின் காலடியில் வீழ்ந்து அவனை சாஷ்டாங்கமாக வணங்கியது.

''ஐயா பாகவதரே, தங்களுடைய இசையைப்போல் இனிய இசையை இதற்கு முன்னர் நான் எப்போதும் கேட்டதில்லை. இதற்கு நான் தங்களுக்குச் செய்யக்கூடிய கைமாறு என்னிடமிருக்கும் இந்த மந்திரமணியைத் தருவதுதான். இந்த மணி உங்கள் வறுமை நோயை அடியோடு போக்க வல்லதாகும். நீங்கள் விரும்பும் சகல பொருட்களையும் இம்மந்திரமணி உங்களுக்கு அளிக்கும். நீங்கள் விரும்பும் பொருளின் பெயரை மூன்றுதரம் உச்சத்துவிட்டு மணியைக் கிலுக்கினால் போதும். அப்பொருள் உடனே உங்கள் முன்னர் வந்துவிடும்'' என்று கூறிக் கொண்டே சங்கீதப்பிசாசு ஒரு கண்டாமணியை சீரங்கன் கையில் ஒப்படைத்தது.

மந்திரமணியைப் பெற்ற சீரங்கனின் மன மகிழ்ச்சியைக் கூறவும் வேண்டுமா? மணியைப் பெற்றுக்கொண்ட சீரங்கன் அதை ஒரு தடவை பரீட்சித்துப்பார்க்க விரும்பினான். ஆகவே ''கனிவர்க்கங்கள் வேண்டும்'' என்று மூன்று தடவை உச்சரித்துவிட்டு மணியைக் கிலுக்கினான். மணியின் ஓசை டணார், டணார் என்று காடு முழுவதும் ஒலித்ததோடு, என்ன ஆச்சரியம்! பலவிதமான கனிவர்க்கங்கள் அவன் முன்னே ஒரு அழகிய விரிப்பில் தோன்றின. மாம்பழம், பலாப்பழம், வாழைப்பழம், ஆப்பிள் - என்ற பலவித கனிகளும் காணப்பட்டன.

சீரங்கன் அவற்றை சங்கீதப்பிசாசோடும், கச்சேரிக்கு வந்து பாட்டைக்கேட்ட அணிற்பிள்ளை, ஓணான், காகங்கள் ஆகியவற்றோடும் பகிர்ந்து உண்டான். அதன்பின் பசியால் வாடும் தனது பிள்ளைகளின் நினைவு வரவே சங்கீதப்பிசாசிடம் ''நான் போய்வருகிறேன்'' என்று விடைபெற்றுக்கொண்டு வீடு நோக்கிப் புறப்பட்டான்.

வழியில் "நல்ல கலைக்கு நாட்டில் இடம் கிடைக்காவிட்டாலும் காட்டில் இடம் கிடைத்ததே. மனிதன் மதிக்காத கலையைப் பிசாசு மதித்துப் போற்றிச் சன்மானமும் அளித்ததே'' என்று தன்னுள் தானே கூறிக் கொண்டான் சீரங்கன்.

[தொடரும்]

அடுத்த இதழில் II-ம் அத்தியாயம்

பொம்மைப் பேய்